ஸ்ரீமத் பாம்பன் குமரகுருதாஸ ஸ்வாமிகள் அருளிய

# நவகணர் தோற்றம்

### அகங்கார கண்டனம்

## கலிவிருத்தம்



**வீரவாகு தேவர்**

நீறு கண்டிகை தாரணஞ் செய்துநீள்
ஏறு போலவெ திர்த்தவ னாரடா
ஆறு மாமுக னைப்பணி யாதவர்
வீறு வீயப்பு டைப்பவ னானடா. (1)

திருநீறும் கண்மணி மாலையும் அணிந்து பெரிய சிங்க ஏறுபோல வந்து என்னை எதிர்த்தவனான நீ யாராடா? பெருமை பொருந்திய ஆறுமுகப் பரமனைப் பணி யாதவரின் மேம்பாடு அழியும்படி ஒறுப்பவன் நானடா.



**வீரகேசரி தேவர் தரளம்**

பீட றாக்கைபி சைந்துபல் லைக்கடித்
தோடி வந்துறு மும்பட னாரடா
ஈடில் கந்தனை யேமதி யாவிருண்
மூட கந்தைமு ருக்குந னானடா. (2)

வலிமை குன்றாத இரு கைகளையும் பிசைந்து பல்லைக் கடித்து ஓடிவந்து என் எதிரே முழங்கும் வீரனாகிய நீ யாரடா? இணையற்ற கந்தப் பரமனை மதியாத அறியாமை கூடிய ஆணவத்தை அழிப்பவன் நானடா.



**வீரமகேந்திர தேவர்**

சடல மெங்கும்வெண் சாம்பரைப் பூசிவந்
தடல்கொண் முட்டிபி டிப்பவ னாரடா
இடரில் வேற்பெரு மானையெண் ணாதவர்
நடலை மார்பிறத் தாக்குந னானடா. (3)

மேனி முழுவதும் வெண்மையான தீருநீற்றைப் பூசிக்கொண்டு வந்து வலிமை கொண்ட முட்டி பிடிப்பவனான நீ யாரடா? துன்பமற்ற வேற்பரமனைச் சிந்தியாதவரின் வஞ்சக நெஞ்சம் அழியும்படி தாக்குகிறவன் நானடா.



**வீரமகேச தேவர்**

கருவத் தோடுநெ டுங்கயி றேகொடு
வருமற் பூதென வந்தவ னாரடா
முருகற் போற்றலி லார்வலி முற்றுமே
ஒருவக் கட்டியு தைப்பவ னானடா. (4)

இறுமாப்போடு நீண்ட கயிற்றை எடுத்துக் கொண்டு வரும் வலிமை மிக்க பூதம்போல வந்தவனான நீ யாரடா? முருகனைத் தொழாதவரின் வலிமை முழுதும் ஒழியும்படி அவரைக் கட்டி உதைப்பவன் நானடா.



**வீரபுரந்தர தேவர்**

பல்க ணுக்களு டைப்பரு வேத்திரம்
புல்கு கையவுன் பேர்புகல் வாயடா
மல்கு சீர்முரு கன்வணங் காத்தலைக்
கல்லு டைத்துக்க ளிப்பவ னானடா. (5)

பல கணுக்களைக் கொண்ட பெரிய பிரம்பைக் கையில் கொண்டவனே! உன் பேரைச் சொல்லடா! நிறைந்த சிறப்புடைய முருகனை வணங்காத தலையாகிய கல்லை உடைத்துக் களிப்பவன் நானடா.



**வீரராக்கத தேவர்**

வச்சி ரத்தடி கையில்வ யங்கவே
அச்ச மின்றிமு னிற்பவ னாரடா
செச்சை வேலவன் கோயில்செல் லாதுசெல்
நச்சர் கான்முரிக் கின்றவ னானடா. (6)

வலிமை மிக்க வளைதடி கையில் விளங்க அச்சம் இல்லாமல் என்முன் நிற்பவன் யாரடா? வெட்சிமாலை யணிந்த வேற்பரமன் திருக்கோயிலுக்குப் போகாத நஞ்சொத்தவரின் காலை முரிக்கின்றவன் நானடா.



**வீரமார்த்தண்ட தேவர்**

ஏணி ருப்புச்ச லாகைகை யேந்திமா
ஊணன் போலெதிர்த் துள்ளவ னாரடா
கீண மில்கும ரன்புகழ் கேட்டிடா
வீணர் காதகழ் வீரமுள் ளோனடா. (7)

வலிமையான இரும்பீட்டியைக் கையில் தாங்கி யாவற்றையும் அழிக்கும் பெரியோன் போல என்னை எதிர்த்து வருகின்ற நீ யாராடா? குற்றமற்ற குமரப் பெருமானின் திருப்புகழைக் கேளாத வீணர் காதுகளை அகழ்ந்தெறியும் வீரன் நானடா.



**வீராந்தக தேவர்**

இந்த நள்ளிர விற்சிறு வாள்பிடித்
தந்த னாயெதிர் நிற்பவ னாரடா
கந்த வேளைத்து தித்தறி யார்கறை
நந்த நாவறுக் கின்றவ னானடா. (8)

இந்த நள்ளிரவிலே கைவாளை ஏந்திக் கொண்டு காலன் போல என் எதிர் நிற்பவன் யாரடா? கந்தவேளைப் புகழ்ந்தறியாதாரின் குற்றம் நீங்கும்படி அவர் நாவை அறுக்கின்றவன் நானடா.



**வீரதீர தேவர்**

நீள வாளுட னேயெதிர் நிற்கின்ற
கோள னேயொல்லை யுன்பெயர் கூறடா
வாள யிற்பெரு மான்றளி கும்பிடாக்
கோளர் கைகள்கு றைப்பவ னானடா. (9)

நீண்ட வாளுடன் என் எதிர் நிற்கின்ற வலிமையுடையவனே! உன் பெயரை உடனே கூறடா. ஒளி பொருந்திய வேலுடைய பெருமானின் திருக்கோயிலைக் கும்பிடாத தீயவர் கைகளை அறுப்பவன் நானடா.

சூரர் காணுங்கள் சொற்படி நான்செயின்
தீர வேலிறை யின்பெனைச் சேருமோ
வீர ரேயது கூடுமென் னும்விதி
சார வோதப்பு கழ்ப்புதன் சான்றரோ. (10)

நவகண வீரர்களே! உங்கள் சொற்படி நான் நடந்தால் வீரம் பொருந்திய வேலிறைவன் வழங்கும் பேரின்பம் எனக்கும் வாய்க்குமா? வீரமுடையவரே! அந்த இன்பம் வந்து கூடும் என்னும் விதி பொருந்துமாறு கூறும் அழகிய திருப்புகழை அருளிய அருணகிரி நாத முனிவரே சான்றாக உள்ளார்.

---

**இப்பாடல் ஸ்ரீமத் பாம்பன் ஸ்வாமிகள்**
**அருளிய ஸ்ரீமத் குமார சுவாமியம்**
**என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது**